**தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 239 - வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூன் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் விடுக்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு செலவின விடயத்திற்காக வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் ரூபா 19,930,000 ஆன ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதனை பயன்படுத்தப்படாமையினால் அவ் ஒதுக்கீடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | அரச செலவினங்களை கட்டுப்படுத்தும் கொள்கை காரணமாக திறைசேரி செயலாளரின் ஆலோசனைப் படி ஒதுக்கீடுகளை தடுத்து வைத்தல், கொடுப்பனவுகளுக்காக அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்து சம்பந்தப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | நி.பி. 50 இன் பிரகாரம் சரியானதும் தர்க ரீதியுமான வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | 06 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் மற்றும் 08 மூலதன செலவின விடயங்களுக்கும் மிகை ஒதுக்கீட்டு ஏற்பாடு செய்ததன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் | அரச செலவினங்களினை கட்டுப்படுத்தும் கொள்கை காரணமாக திறைசேரி செயலாளரின் ஆலோசனைப் படி ஒதுக்கீடுகளை தடுத்து வைத்தல், கொடுப்பனவுகளுக்காக அரச | நி.பி. 50 இன் பிரகாரம் சரியானதும் தர்க ரீதியுமான வருடாந்த செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறாக மொத்தம் ரூபா 38,145,580 ஆன ஒதுக்கீடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், அச்சேமிப்பு தேறிய ஒதுக்கீட்டின் 31 சதவீதத்திலிருந்து 94 சதவீத பாரிய அளவிலாக இருந்தது. எவ்வாறாயினும், இம்மீதிகள் திறைசேரி செயலாளரின் ஆலோசனைப் படி ஒதுக்கீடுகளை தடுத்து வைக்கப்பட்டமையினால் ஏற்பட்டதாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | சார்பற்ற நிறுவனங்களிலிருந்து சம்பந்தப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ஒதுக்கீடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள்<br>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 திசெம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் SA/MAA/02/01/01 கொண்ட அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக மீதி சய ரூபா 3,509,894 ஆக இருந்தது. திருத்தப்பட்ட ACA-7 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுநிதி இணக்கக் கூற்றின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக கட்டுநிதி சீராக்கல் மீதி மறை(-) ரூபா 3,509,894 ஆக இருந்த போதிலும், அது ரூபா 3,509,894 ஆக இருக்க வேண்டியுள்ளது. நிதிச் செயலாற்றல் கூற்றில் மறை (-) ரூபா 3,509,894 ஆன மீதிக்கு | SA/MAA/02/01/01 கொண்ட அரச கணக்குகள் ACA-7 படிவத்தினை நிரப்பப்பட்டுள்ளதுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு எதுவித மாற்றமும் செய்யப்படாமல் சம்பந்தப்பட்ட விவரத்தின் முன்னாக உருப்படிகளின் நிதிப் பெறுமானத்தினை குறிப்பிடப்பட்டு சீராக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அதில் கட்டுநிதி சீராக்கல் மீதியாக ரூபா 3,509,894 வினை பெறுமதியாக காட்டப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் தர்க்க ரீதியாக தயாரிக்கப்பட வேண்டும். |

கட்டுநிதி இணக்க கூற்றின் படி பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நேர் (+) ரூபா 3,509,894 கட்டுநிதி சீராக்கல் மீதியினை சீராக்கினால் கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 0 ஆக வேண்டி இருந்தது. ஆயினும், நிதிச் செயலாற்றல் கூற்றில் கட்டுநிதி சீராக்கல் மீதி மறை(-) ரூபா 3,509,894 என காட்டப்பட்டமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக கட்டுநிதி மீதி (பூச்சியம்) ஆக காட்டப்பட்டமை தர்க்க ரீதியாக நேர்ந்திருக்கவில்லை.

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் மாதம் இரண்டு செலவின விடயங்களின் கீழ் முறயே ரூபா 466,487 மற்றும் ரூபா 61,640 ஆக இருந்ததுடன் மொத்தம் ரூபா 528,127 பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் உட்பட்டிருந்த பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாட்டுக் கூற்றுக்களில் அப்பொறுப்புக்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 வரையிலும் பொருட்கள் கிடைக்காதிருக்காமையினால் பொறுப்புக்களாக 2103 செலவின விடயத்தின் கீழ் ஏற்படுத்திக் கொண்டுள்ளதுடன் அதனை பொறுப்புக்களுக்கான பட்டியலில் குறிக்கும் போது 2108 என அச்சுப் பிழையாக குறிக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்கான பொறுப்புக்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டியமை. |

## 2.4 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆகஸ்ட் 11 திகதி காலமான ஒரு உத்தியோகத்தரிடமிருந்து மற்றும் 2021 யூலை 20 ஆந் திகதி கடமையிலிருந்து விலகிச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தத் தொகையான ரூபா 424,716 கடன் நிலுவையினை அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் திணைக்களத்திற்கு இயலாது போய் உள்ளது. | இறப்பு பணிக்கொடையிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு ஓய்வூதிய திணைக்களத்திடம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2021.07.20 திகதி சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அதிகாரியிடமிருந்து அரசு அறவிடப்பட வேண்டிய இடர் கடன் நிலுவையினை தீர்க்கும் படி அதிகாரியிடம் 2022.01.19 திகதிய கடிதத்தில் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதியினை அறவிடுவதற்கு போதிய அளவிலான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவுமட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டு வருகின்ற CS-DRMS கடன் முகாமைத்துவ முறைமையினை கடன் சேவைகளுக்கான எதிர்வுகூறல் உள்ளிட்ட அலுவல்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள முறைமயொன்றெனவும் அதன்படி கடன்களுக்கான தரவுகளை ITMIS இனைக்கு மெய்நிகர் முறையில் இணைப்பது | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் 30/94 மற்றும் 1994.04.20 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவிகளை விட்டுக் கொள்வதற்காக இத்திணைக்களம் CS-DRMS தரவு முறைமையினை பயன்படுத்திக் கொள்கின்றது. | கடன் முகாமைத்துவம் மற்றும் சேவையாற்றல் அலுவலுக்காக கணக்கீட்டு மற்றும் காசு பாய்ச்சல் வசதிகளுடனான முறைமை யொன்றினை இற்றைப்படுத்தி பேணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடலினை குறிப்பிடத்தக்க அளவில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் ஓரளவு காலங்கடந்த போதிலும் CS-DRMS முறைமையினை ITMIS உடன் இணைப்பது கடினமான காரியமாக உள்ளதாகவும் கணக்காய்வினைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. கடன் முகாமைத்துவ அலுவல்களுடன் காசு வீச்சு முகாமைத்துவம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களினை கணக்கிலிடுவதற்கான வசதிகளுடனான மற்றும் / அல்லது CS-DRMS முறைமையிலிருந்து ITMIS முறைமையினைக்கு தேவையான தரவுகளை பரிமாற்றக்கூடிய வசதிகள் உள்ள கடன் முகாமைத்துவ முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு திணைக்களம் 2022 மே மாதம் இறுதி வரையிலும் செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆயினும், தீர்வையாகாத வகையிலான வெளிநாட்டுக் கடன்களுக்கு வட்டிப் பணமாக ரூபா 462,721 மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக ரூபா 5,710,641 செலுத்தப்பட்டிருந்தன. | 2021008, 2021016 தொடர்பாக தீர்வையான பெறுமதியினை முறைமையில் பதியப்படுவதற்கு கைத்தவறு காரணமாக தாமதப்பட்டுள்ளதுடன் முறைமையினை இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. இதனகத்திற்கு பின்னர் அது போன்ற தவறு ஏற்படாதவாறு உள்ளக முறைமையினை சரி செய்யப்பட்டுள்ளது. | தீர்வையாக பெறுமானத்தினை சரியாகவும் தாமதமின்றியும் முறைமையில் பதிவிடப்பட வேண்டும். |

(இ) 2021 வருடத்திற்கான செயலாற்றல் திட்டத்தின் படி தீர்வையான மதிப்பீடு மற்றும் உண்மையில் தீர்வையான பெறுமதி கீழுள்ளவாறு இருந்தது.

| அபிவிருத்தி தரப்பினர் | தீர்வையான மதிப்பீடு 2021 | உண்மையில் தீர்வையான பெறுமதி 2021 | சரிவு | சரிவு தீர்வையான மதிப்பீட்டின் |
|---|---|---|---|---|
| | (ஐ.அ.டொ. மில்லியன்) | (ஐ.அ.டொ. மில்லியன்) | (ஐ.அ.டொ. மில்லியன்) | சதவீதமாக நூற்றுக்கு |
| உலக வங்கி | 276 | 434 | 158 | 57 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 390 | 615 | 225 | 58 |
| சீனா | 312 | 969 | 657 | 211 |
| யப்பான் | 178 | 135 | 430 | 24 |
| கொரியா | 20 | 11 | 90 | 45 |
| மத்திய கிழக்கு நாடுகள் | 82 | 44 | 38 | 46 |
| தெற்காசிய நாடுகள் | 62 | 87 | 25 | 40 |
| ரசியா, அவுஸ்ரேலியா மற்றும் மேற்கத்தய நாடுகள் | 210 | 111 | 99 | 47 |
| ஐக்கிய நாடுகள் அமைப்பு | 16 | 12 | 04 | 25 |
| மொத்தம் | **1546** | **2418** | **872** | |

இது தொடர்பாக கீழுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 2021 வருடம் தீர்வையான மதிப்பீட்டின் மொத்தப் பெறுமதி ஐ.அ.டொலர் 1,546 மில்லியன் ஆன போதிலும் உண்மையில் தீர்வையான மதிப்பீடு ஐ.அ.டொலர் 2,418 மில்லியன் ஆனதன் காரணமாக உண்மையில் தீர்வையான பெறுமதி தீர்வையான மதிப்பீட்டினையும் விட ஐ.அ.டொலர் 872 அதாவது சுமார் சுமார் நூற்றுக்கு 56 கூடி இருந்தது. | 2021 வருடம் இந்நாட்டு பொருளாதாரத்தில் ஏற்பட்ட நிச்சயமற்ற நிலைமை மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடியினை தனிப்பதற்காக வரவு செலவுத் திட்டத்திற்கான சந்தைக் கடன் நிதி உதவியினை பெற்றுக் கொள்ளப்பட்டதன் காரணமாக மற்றும் கொவிட் 19 தொற்று நிலைமையினை கட்டுப்படுத்துவதற்காக மேலதிக ஊசி மருந்தினை பரிந்துரைக்கப் பட்டமையினால் அவற்றினை கொள்வனவு செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிடமிருந்து கொவிட் 19 மேலதிக அவசரக் கடன் வசதிகளினை பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்தமையினாலும் திட்டத்தினைக்கு நேரொத்த 2021 இல் முழு தீர்வையான பெறுமானத்தில் அதிகரிப்பினை ஏற்பட்டுள்ளது. | முறையாக திட்டமிடப்பட்டு வெளிநாட்டுக் கடன் நிதிகளினை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | தீர்வையான மதிப்பீட்டின் படி சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட கடன் பெறுமானம் ஐ.அ.டொலர் 312 மில்லியனாக இருந்த போதிம் அது ஐ.அ.டொலர் 969 மில்லியன் வரை நூற்றுக்கு 211 ஆக அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அது உண்மையான பெறுமதியின் ஆகக்கூடிய பெறுமானமாகும். | சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட திட்டத்திற்கான கடன் அளவினை இவ்வாறு உயருவதற்கு காரணம் ஐ.அ.டொலர் 809 மில்லியன் (ஐ.அ.டொலர் 500 மில்லியன் மற்றும் சீன யுவான் 2000 மில்லியன் ஆகும்) சந்தைக் கடனுள் புகுத்தப்பட்டிருப்பதாகும். இந்த சந்தைக் கடன் அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையினுள் அமைச்சரவை அனுமதியுடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தருணத்திற்கேற்றவாறு பெற்றுக் கொள்வதனால் குறிப்பிட்டு எதிர்வு கூற | முறையாக திட்டமிடப்பட்டு வெளிநாட்டு கடன் நிதிகளினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முடியாது நிலவிய சந்தை நிலைமை காரணமாக சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து அதனை பெற்றுக் கொண்டமையினால் அதனை சீன கடனின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | |
| (iii) | ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் தெற்காசிய நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களின் உண்மையான தீர்வைப் பெறுமதி தீர்வையான மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் முறையே நூற்றுக்கு 58, நூற்றுக்கு 57 மற்றும் நூற்றுக்கு 40 அதிகரித்திருந்தது. | 2021 வருடத்திற்கு பின்னர் கொவிட் 19 (post covid 19) கட்டுப்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்ட மேலதிக ஊசி மருந்துகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து அவசர கடன் சலுகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், பொருளாதாரத்தில் நிலவிய சிக்கலான நிலைமையினை தவிர்க்கும் பொருட்டு இந்திய டொலர் கடன் சலுகையின் கீழ் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கைக்கு அமைய தீர்வையானவற்றை பெற்றுக் கொள்வதனை 2021 வருடம் துரிதப்படுத்தியதன் காரணமாக இவ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. | முறையாக திட்டமிடப்பட்டு வெளிநாட்டு கடன் நிதிகளினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (iv) | ரஷ்யா, அவுஸ்ரேலியா, மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும், கொரியா ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் யப்பானிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன்கள் நூற்றுக்கு 24 முதற் கொண்டு 47 வரையிலான பாரியளவில் குறைந்து போய் இருந்தது. | 2021 வருடம் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக இத்திட்டங்களில் எதிர்பார்த்தபடி ஒப்பந்தங்கள் வளங்கல் திட்டங்களுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் வேலைத் தளங்களை தொடர்ந்து பேணிச் செல்லும் போது ஏற்பட்ட இடர்பாடுகள் காரணமாக திட்டமிட்டபடி முன்னேற்றத்தினை ஈட்டிக் கொள்வதற்கு இயலாது போயிற்று. ஆகையால் இத்திட்டங்களின் பாவனை கடன் மீள் தீர்வைகளில் | முறையாக திட்டமிடப்பட்டு வெளிநாட்டு கடன் நிதிகளினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேடிப்பார்க்கப்பட்ட இலக்குகளிலிருந்து நேரொத்த குறைவான பெபறுமதியினை ஏற்படுத்தியிருந்தது. | |
| (ஈ) | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய இலக்கம் 30/94 கொண்ட வெளிநாட்டு உதவிகளுக்கான கணக்குகள் வைப்பினை தொடர்பாக அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் வெளிநாட்டு உதவிகள் தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்கள்களும் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயம் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கணக்காய்வினைக்கு கிடைத்த தகவல்களின் படி 2021 வருடம் திறைசேரியினை அறிவுறுத்தப்படாமல் 03 நிறுவனங்களினால் 08 திட்டங்களுக்காக மொத்தம் ரூபா 25.52 மில்லியன் வெளிநாட்டு கொடைகளினை நேரடியாக அந்நிறுவனங்கள் பெற்றுக் கொண்டுள்ளன. | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 கொண்ட வெளிநாட்டு உதவிகளுக்கான கணக்கு வைப்பினை தொடர்பான சுற்றறிக்கை மற்றும் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் நிதிப் பிரமாணம் 610 படி வெளிநாட்டு உதவிகள் தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்வது அல்லது சம்பந்தப்பட்ட நியதிச் சட்ட நிறுவனங்களுக்கு பணிப்பினை மேற்கொள்ளும் அதிகாரம் இத்திணைக்களத்திடம் வழங்கப்பட்டில்லாததுடன் அதற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட நிர்வாக முறைமை அல்லது எவ்விதமான ஏற்பாடுகளும் இத்திணைக்களத்திடம் பெற்றுக் கொடுக்கப்பட்டில்லை. | நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஆலோசனைகள் போதுமானதாக இல்லாதிருப்பின் அவற்றினை திருத்தப்பட்டு அல்லது வெளிநாட்டு உதவிகளினை பெற்றுக் கொள்வதற்கான நிர்வாக பொறுப்பினை திறைசேரி பெற்றுக் கொள்ள வேண்டியமை. |
| (உ) | 2020 வருடம் இலங்கையில் கொவிட் 19 தொற்று பரவல் ஆரம்பமானதுடன் பற்பல வெளி இராஜ்யங்கள், உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் தனிநபர்கள், மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்து சுகாதார அமைச்சு மற்றும் அவற்றின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார | | |

| | | | |
|---|---|---|---|
| | நிலையங்களுக்கும் நிதி மற்றும் நிதிசாரா உதவிகள் மற்றும் சன்மானங்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு கிடைக்கப் பெற்ற சன்மானங்களை மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. விபரங்கள் கீழே காணப்படுகின்றன. | | |
| (i) | கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்களில் 05 நிறுவனங்களிடம் 2020 வருடம் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 18,716,785 ஆன நிதி உதவிகள், மற்றும் சன்மானங்களுக்கான ஒதுக்கீடுகளை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | கொடையாளி களின் நம்பிக்கை யினையும் உறுதிப்படுத்தும் வகையில் கிடைக்கப் பெற்ற கொடைகள் அதற்கான குறிக்கோள் களுக்கு இடுவது தொடர்பான இணைப்பினை மற்றும் ஒழுங்குமுறை படுத்தலினை வழுப்படுத்தப்பட வேண்டியமை. |
| (ii) | கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் 16 பிரிவுகளிடம் 2020 வருடம் கிடைக்கப் பெற்றிருந்த மொத்தம் ரூப 889,071,645 பெறுமானமுள்ள பொருட்கள் மற்றும் நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் 19 பிரிவுகளிடம் 2020 வருடம் கிடைக்கப் பெற்றிருந்த பெறுமதியினைக்கான | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| தகவல்கள் உட்பட்டிராத 4,956 பொருள் அலகுகள் முறைப்படி பதியப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) கணக்காய்விற்குப் பிறகு தகவல்களை சமர்ப்பிக்கப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் 60 நிறுவனங்களிடம் 2020 மற்றும் 2021 வருடங்களில் கிடைக்கப் பெற்ற மொத்தம் ரூபா 1,041,492,068 பெறுமதியான பொருட்கள் மற்றும் பெறுமதிகளினை மதிப்பீடு செய்யப்படாத 157,509 பொருள் உருப்படிகள் முறையாக பதியப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**3.2 வெளிநாட்டு கடன்களை பெற்றுக்கொள்ளும் போது பாவனை மேற்கொள்ளப்படாத கடன் மீதிகளுக்காக கட்டணம் செலுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி வெளிநாட்டு கடன்களினை பெற்றுக் கொள்வதற்காக உடன்படிக்கையிடல் மற்றும் அது தொடர்பான பாவனைகளுக்கான பரீட்சிப்பின் போது 2016 வருடம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2020 வருடம் இறுதியாகும் போதும் அக்கடன் உடன்படிக்கைகள் | | |

தொடர்பாக பாவனை மேற்கொள்ளப்படாதிருக்கும் கடன் மீதிகள் தொடர்பாக கீழ் காணும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) கடன் இலக்கம் 2016015**

| | | |
|---|---|---|
| பெலிஅத்தையிலிருந்து வெட்டிய வரையிலான தெற்கு அதிவேக பாதையினை விஸ்தரிக்கும் திட்டத்திற்கான முழு கிரயத்தில் நூற்றுக்கு 85 ஈடுசெய்யும் வகையில் யூஎஸ்டொலர் 360,293,948 கடன் தொகையினை 05 வருட சலுகைக் கால கட்டணத்துடனான 20 வருடங்களில் மீள செலுத்தும் அடிப்படையில் முன் உரிமை கொள்வனவாளரின் கடன் வாய்ப்பின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி சீனாவின் இறக்குமதி ஏற்றுமதி வங்கியுடன் ஒப்பந்தமிடப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்தத்தின் படி மொத்தக் கடன் தொகையில் பாவனை செய்யப்படாத கடன் தொகையினைக்கு வருடாந்தம் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது.<br><br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2021 யூன் 24 ஆந் திகதியாகும் போது கடன் தொகையினை எடுக்கப்பட்டு முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மே 15 ஆந் திகதி வரையிலும் அக்கடன் தொகையில் ஐ.அ.டொலர் 279,355,795 அதாவது | இக்கடன் ஒப்பந்தத்தின் 2.2 மற்றும் 2.7 பிரிவின் படி மொத்த கடன் தொகையில் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகைக்காக வருடாந்தம் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அதன்படி 2017.01.21 ஆந் திகதி முதல் 2020.01.21 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் யூ.எஸ்.டொலர் 2,179,971.12 தொகையினையும் 2020.01.21 ஆந் திகதி முதல் 2021.07.21 திகதியிலான காலத்திற்காக ஐ.அ.டொலர் 461,932.87 தொகையினையும் இணக்கக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.<br><br>இத்திட்டத்தின் இறுதி பாவனையினை 2021.02.07 திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் நெடுஞ்சாலை அமைச்சினால் 2019 வருடம் இத்திட்ட விடயப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் காரணமாக நிர்மாணப் பணிகளின் முடிவின் போது சுமார் ரூபா 12 மில்லியன் சேமிக்கப்பட்டது. அச்சேமிப்பினை பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தப்பட்டு பெதிகம இடமாறல் மற்றும் பெலிஅத்த சேவைக்கான பகுதியினை நிர்மாணித்தல் மற்றும் அதுசார்ந்த பாதைகளை மேம்படுத்தல் | திட்டங்களினை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணம் குறைக்கப்பட்டு திட்டங்களுக்கான கடன் தொகையினை பூரண பாவனைக்காக பயன்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நூற்றுக்கு 88 மாத்திரம் பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 22 அதாவது ஐ.அ.டொலர் 80,938,153 பாவனை செய்யாது விடப்பட்டிருந்தது. அத்தொகையை 2021 யூன் 24 ஆந் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொடுக்க இயலாது என 2021 யூன் 25 ஆந் திகதி சீனாவின் இறக்குமதி ஏற்றுமதி வங்கி அறிவித்திருந்தது. அதன்படி இவ்வாறு பாவனை செய்யாமையின் காரணமாக பெற்றுக் கொள்ள முடியாது போன கடன் தொகைக்காக வருடாந்தம் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணமாக 05 வருடங்களுள் ஐ.அ.டொலர் 2,641,904 செலுத்த நேர்ந்திருந்தது. | ஆகிய பிரசுரிப்பினை சீனா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்ட போதிலும் அக்கோரிக்கையினை சீனா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி நிராகரித்து விட்டது. ஆகையால் அச்சேமிப்பு தொகையினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**(ii) கடன் இலக்கம் 2016034**

| | | |
|---|---|---|
| பாரிய கொழும்பு நீர் மற்றும் சாக்கடை நீர் முகாமைத்துவ மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கடன்களினை பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தங்கள் மற்றும் பாவனை மேற்கொள்ளப்படாத கடன்களுக்கான கட்டணங்கள் செலுத்தப்படுவது தொடர்பான விபரங்கள் எதுவும் கணக்காய்வினைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், 2020 வருடம் முடிவுறும் போது இக்கடன் | பாரிய கொழும்பு நீர் மற்றும் சாக்கடை நீர் முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கடன் தொகையினை சம்பந்தப்பட்ட பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகை மீது 2020.12.31 வரையிலும் இணக்கக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கி.மீ 29.4 ஆன மலம் வடிகால் குழாய் அமைப்பினை நிர்மாணித்தல் மற்றும் இரு இறைக்கும் நிலையங்களினை நிர்மாணிக்கும் அலுவல்கள் 2017 வருடம் | திட்டத்தினை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணங்கள் குறைக்கப்பட்டு திட்டங்களுக்கான கடன் தொகையினை பூரணமாக பயன்படுத்து வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | |
|---|---|
| தொகையில் ஐ.அ.டொலர் 19,159,283 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 84.4 அதாவது ஐ.அ.டொலர் 103,840,717 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது. | ஆரம்பிக்கப்பட்டது. திட்டத்திற்கான பிரதான ஒப்பந்தத்தினை தற்போதைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் திட்டத்தினை உரிய காலத்தினுள் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உரிய கால நேரத்தினுள் திட்டம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு முடியாது போனமையினால் இத்திட்டத்தின் பாவனைகளினை திட்டமிட்டவாறு மேற்கொள்வதற்கு இயலாது போய் உள்ளமை அவதானிக்கப்பட்டது. |

**(iii) கடன் இலக்கம் 2016021**

| | | |
|---|---|---|
| கிராமிய மற்றும் ஆரோக்கிய பாதுகாப்பிற்கான அங்குரார்ப்பண திட்டத்திற்காக யூரோ மில்லியன் 76 ஆன தொகையினை 7 வருட சலுகை காலத்துடன் 25 வருடங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனத்துடன் 2016 யூன் 01 ஆந் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் அதன்போது மொத்தக் கடன் தொகையில் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகை மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.5 இணக்கக் கட்டணம் செலுத்துவதற்கு உடன்படப்பட்டது.<br><br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2020 வருட இறுதியில் | இத்திட்டம் தொடர்பான சாத்தியக்கூற்று கற்கையினை மற்றும் விபரமான திட்டத்தினை தயார் செய்வதற்காக ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தத்தினை 2018 ஆகஸ்ட் மாதம் வழங்கப்பட்டுள்ளதுடன் அத்திட்டத்தினை (Detailed Design) 2020 வருடம் முற்பகுதியில் தயாரித்து முடிக்கப்பட்டிருந்தது. கடன் தொகையில் சுமார் நூற்றுக்கு 90 செலவாகும் சிவில் அலுவல்களினை ஆரம்பிப்பது மேற்படி விபரத் திட்டத்தினை தயாரிக்கப்பட்டு முடிந்ததன் பின்னர் அதனின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய காரியமாகும். சாத்தியக்கூற்று கற்கை மற்றும் விபரத்திட்டத்தின் படி மலவடிகால் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மலவடிகால் அமைப்பினை நிர்மாணிக்கும் பொருட்டு விலைமனு கோரலினை | திட்டங்களை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணங்களை குறைப்பதற்கு முழு கடன் தொகையினை பாவனை மேற்கொள் வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அக்கடன் தொயியில் யூரோ 2,756,563 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 96 அதாவது யூரோ 73,243,437 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது. 2020 மற்றும் 2021 வருடங்களில் மாத்திரம் நூற்றுக்கு 0.5 இணக்கக் கட்டணமாக யூரோ 376,855 மற்றும் யூரோ 185,499 உம் ஆக மொத்தம யூரோ 562,354 செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் குறுகிய காலத்தினுள் அவ்வலுவல்கள் முடிவுறும். கடன் ஒப்பந்தத்தினைக்கு உட்படும் போது அதன் அடிப்படை நிதிசார்ந்த நிபந்தனையாக முன்வைக்கப்படுவது பாவனை மேற்கொள்ளப்படாதிருக்கு கடன் மீதியினை மீது கட்டணம் அறவிடப்படுவதாகும். அதன்படி பாவனை மேற்கொள்ளப்படாத மீதியினைக்காக வருடத்திற்கு நூற்றுக்கு 0.5 ஆன இணக்கக் கட்டணத்தினை இவ் ஒப்பந்தத்தின் படி செலுத்ததல் வேண்டும். |

**(iv) கடன் இலக்கம் 2016039**

| | | |
|---|---|---|
| அநுராதபுரம் ஒன்றிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி திட்டத்தினை செயற்படுத்துவற்காக யூரோ 52,000,000 கடன் தொகையினை 7 வருட சலுகை காலத்துடனான 20 வருடங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு பிரான்ஸ் அபிவிருத்தி நிலையத்துடன் 2016 திசெம்பர் 01 ஆந் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் போது மொத்தக் கடன் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகை மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.5 இணக்கக் கட்டணம் செலுத்துவதற்கு உடன்பட்டது. | ஒப்பந்தத்தினுள் உள்ளவாறு பாவனை மேற்கொள்ளப்படாத மீதியினை மீது இணக்கக் கட்டணமாக வருடாந்தம் நூற்றுக்கு 0.5 செலுத்தப்பட வேண்டியுள்ளது. திட்டத்தின் விபரப்படியான திட்டததினை தயார் செய்வதற்காக ஆலோசனை சேவை ஒப்பந்தத்தினை 2017 செப்டம்பர் மாதம் வழங்கப்பட்டுள்ளது. திட்டத்திற்கான விவரப்படியான திட்டம் 2018 ஒக்தோபர் மாதம் இறுதியில் பெற்றுத்தர வேண்டியுள்ள போதிலும் அதனை செய்து முடிப்பதற்கு 2021 மார்ச் மாதம் வரையிலும் காலக்கெடு ஏற்பட்டுள்ளது. விபரப் படியான திட்டத்தினை தயாரிக்கப்படும் போது இனங்காணப்பட்ட துரிதமாக செயற்படுத்தக்கூடிய | திட்டங்களை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணங்களை குறைப்பதற்கும் முழு கடன் தொகையினை பாவனை மேற்கொள் வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2020 வருட இறுதி வரை அக்கடன் தொகையில் யூரோ 1,864,010 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 96.42 அதாவது யூரோ 50,135,990 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது. 2020 மற்றும் 2021 வருடங்களில் மாத்திரம் நூற்றுக்கு 0.5 இணைக்கக் கட்டணமாக யூரோ 127,991 மற்றும் யூரோ 251,496 என மொத்தம் யூரோ 379,487 செலுத்தப்பட்டிருந்தது.

செயற்பாடுகளுக்காக (Quick win activities) விலைமனு கோரலினை 2020 வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி அதன் முதல் ஒப்பந்தம் 2020 யூன் / யூலை காலத்தினுள் வழங்கப்பட்டுள்ளது. திட்டமும் 2023 செப்டம்பர் 30 இல் உள்ளவாறு முடிக்கப்படவுள்ளது. அதன்படி கடன் தொகையின் மீதியினை 2023 வருடம் இறதியாகும் போது பாவனை மேற்கொள்ளப்படும்.

**(v) கடன் இலக்கம் 2016023**

ஆனமடுவ திரண்ட நீர் வழங்கல் திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக யூரோ 29,501,875 கடன் தொகையினை 4 வருட கால சலுகையுடனான 40 வருடங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு ஸ்பானிய அரசுடன் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன் போது மொத்த கட்ட தொகையில் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகை மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.10 இணைக்கக் கட்டணம் செலுத்துவதற்கு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. கணக்காய்வினைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2020 வருட முடிவின் போது அக்கடன் தொகையில் யூரோ 12,227,405 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன்

இவ் ஒப்பந்தத்திற்காக இணைக்கக்கட்டணமாக பாவனை மேற்கொள்ளப்படாத மீதியின் மீது நூற்றுக்கு 0.1 வருடத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது.

திட்டம் 2020 மே மாதத்தில் முடிக்கப்பட்டு இருந்த போதிலும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்மாணப் பணிகள், நீரினை பெற்றுக் கொள்ளும் இடத்தில் ஏற்பட்ட மாற்றம் நீர்க்குழாய்களினை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக உரிய காலத்தினுள் திட்டத்தினை முடிக்கப்பட இயலாது போயிற்று. அதனால் திட்டக் காலத்தினை 2022 மே மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020 வருடம் ஆகும் போது பாவனை மேற்கொள்ளப்படாத மீதியினை ஏற்படும் இதுவரையிலும் மொத்த பாவனைத் தொகை யூரோ

திட்டங்களை துரிதமாக முடிக்கப்பட்டு இணைக்கக் கட்டணங்களை குறைப்பதற்கும் முழு கடன் தொகையினை பாவனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும்.

தொகையில் நூற்றுக்கு 58.55 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது 2020 வருடம் மாத்திரம் நூற்றுக்கு 0.5 இணக்கக் கட்டணமாக யூரோ 18,223 செலுத்தப்பட்டிருந்தது.

15.3 மில்லியன் ஆகும்.

**(vi) கடன் இலக்கம் 2016019**

பெரும் மாத்தளை நீர் வழங்கும் திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக யூரோ 123,728,034 கடன் தொகையினை 3 வருட கால சலுகை காலத்துடனான 15 வருடங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு பிரான்சில் கிரடிட் அக்ரிகோல் இன்வெஸ்ட் மன்ட வங்கி நெட்டிக்ஸ் பீஎன்பீ பெரிபாஸ் மற்றும் ஒஸ்ரியாவின் யூனி கிரடிட் வங்கியுடன் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன்போது மொத்தக் கடன் தொகையில் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.75 இணக்கக் கட்டணம் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2020 வருட இறுதி வரை அக்கடன் தொகையில் யூரோ 85,789,907 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 30.66 அதாவது யூரோ 37,938,128 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது.

இந்த ஒப்பந்தத்திற்காக இணக்கக் கட்டணமாக பாவனை மேற்கொள்ளப்படாத மீதியினையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.75 செலுத்தப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் அலுவல்கள் 2019 செப்டம்பர் 25 திகதி முடிவுற இருந்த போதிலும் ரத்தொட்டை நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அம்பன்கஹ நீர் சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படம் இடங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் ரத்தொட்டையில் நீரினை பெறப்படும் தேக்கங்கள் தொடர்பாக ஏற்பட்ட சிக்கல்கள் நீர் குழாய்களினை விநியோகம் மேற்கொள்ளப்படும் போது ஏற்பட்ட தாமதங்கள் போன்ற காரணிகளினால் உரிய காலத்தினுள் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு இயலாது போயிற்று. திட்டத்திற்கான காலத்தினை 2022 பெப்ரவரி 17 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. தற்போதைக்கு இதன் மொத்த பாவனை யூரோ 107 மில்லியன் ஆகும்.

திட்டங்களினை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணங்களை குறைப்பதற்கு கடன் தொகையினை முழுமையாக மேற்கொள் வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும்.

2020 வருடத்தில் மாத்திரம் நூற்றுக்கு 0.75 இணக்கக் கட்டணமாக் யூரோ 368,283 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி வெளிநாட்டு உதவிகளினை பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் அதனுடன் தொடர்புள்ள பாவனைகள் சம்பந்தப்பட்ட பரீட்சிப்பின் போது மாதிரிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட, 2014 வருடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2021 வருடம் இறுதியாகியும் அக்கடன் ஒப்பந்தங்கள் தொடர்பாக பாவனை மேற்கொள்ளப் படாதிருக்கும் கடன் மீதிகள் மற்றும் அது தொடர்பான கொடுப்பனவுகள் சம்பந்தமாக கீழுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) கடன் இலக்கம் 2014040**

மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையிலும் தெற்கு அதிவேக பாதையினை நிர்மாணிப்பதற்காக திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக ஐ..அ.டொலர் 683,494,300 கடன் தொகையினை 5 வருட சலுகை காலத்துடனான 20 வருடங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையின் கீழ் முன் உரிமை கொள்வனவாளரின் கடன் வாய்ப்பின் கீழ் பெற்றுக் இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2019.11.09 திகதியாகும் போது முடிவுற்றதுடன் திட்டத்தின் விடயத்தினை சம்பந்தப்பட்ட திட்டத்தினை செயற்படுத்தும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் வரையறுக்கப்பட்டமையினால் மற்றும் அந்நிய செலவாணி விகிதாசாரம் மாற்றமடைந்ததன் காரணத்தினால் சுமார் ரூபா 3.5 பில்லியன் சேமிப்பினை ஏற்பட்டது. இச்சேமிப்பினை பயனுள்ள வகையில் திட்டங்களை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்க கட்டணங்களை குறைப்பதற்கும் முழு கடன் தொகையினை பாவனை மேற்கொள் வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும்.

கொள்வதற்கு சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் 2014 திசெம்பர் 23 ஆந் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அந்த மொத்தக் கடன் தொகையில் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகை மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணம் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2021 யூன் 24 ஆந் திகதி வரையும் அக்கடன் தொயையில் ஐ.அ.டொலர் 663,982,749 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 3 அதாவது ஐ.அ.டொலர் 19,511,551 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது. 2020 வருடம் மாத்திரம் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணமாக ஐ.அ.டொலர் 56,089,787 செலுத்தப்பட்டிருந்தது.

உபயோகப்படுத்திக் கொண்டு இப்பகுதியில் இடமாற்றலுக்கான நுழை பாதைகளினை நிர்மாணிப்பதற்கான கோரிக்கையினை சீன இறக்குமதி ஏற்றுமதி வங்கியில் முன்வைக்கப்பட்ட போதிலும் அதனை அங்கீகரிக்கப்படவில்லை.

**(ii) கடன் இலக்கம் 2014024**

வெளிவட்ட வடிவ அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் கடவத்தையிலிருந்து கெலவரபிட்டிய வரையிலான பகுதியினை அமுல் செய்வதற்காக ஐ.அ.டொலர் 494,037,400 கடன் தொகையினை 5 வருட சலுகை காலத்துடனான 20 வருடங்களில் மீளச் செலுத்தம் அடிப்படையின் கீழ் முன் உரிமை கொள்வனவாளரின் கடன் வாய்ப்பின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு சீன

இத்திட்டம் தொடர்பான கடன் ஒப்பந்தத்தின் படி பாவனை மேற்கொள்ளக் கூடிய எல்லை 2020.10.26 முடிவடைந்தவுடன் திட்டத்தின் விடயப் பரப்பு வரையறுக்கப்பட்டமை மற்றும் நாட்டில் நிலவிய நிதி நிலைமையினை கவனத்திற் கொண்டு மிக அவசியமான அலுவல்களினை மாத்திரம் செய்து முடிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 20.9 மில்லியன் அளவிலான சேமிப்பினை ஏற்பட்டுள்ளது. இச்சேமிப்பினை பயனுள்ள வகையில் பாவனை

திட்டங்களை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணங்களைக் குறைப்பதற்கும் முழு கடன் தொகையினை பாவனை மேற்கொள் வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் 2014 செப்டம்பர் 16 ஆந் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அம்மொத்த் கடன் தொகையில் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணம் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது. கணக்காய்வினைக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் படி 2021 யூன் 24 ஆந் திகதி வரையும் அக்கடன் தொகையில் ஐ.அ.டொலர் 353,309,162 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு28 அதாவது ஐ.அ.டொலர் 140,728,238 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 வருடத்திற்கு மட்டும் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணமாக ஐ.அ.டொலர் 32,212,172 செலுத்தப்பட்டிருந்தது.

மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு இப்பகுதியில் மேலதிக நிர்மாணப் பணிகளினை மேற்கொள்வதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் சேர்ந்து சீன இறக்குமதி ஏற்றுமதி வங்கியிடம் முன்வைக்கப்பட்ட போதிலும் அதனை அங்கீகரிக்கப்படவில்லை.

**(iii) கடன் இலக்கம் 2014025**

மத்தாளையிலிருந்து அந்தரவெவ ஊடாக ஹம்பாந்தோட்டை வரையிலான தெற்கு நெடுஞ்சாலையினை விஸ்தரிக்கும் திட்டத்தினை அமுல் செய்வதற்காக ரென்மின்பி யுவான் 2,528,171,834 கடன் தொகையினை 5 வருட சலுகை காலத்துடனான 20 வருடங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு இறக்குமதி ஏற்றுமதி வங்கியுடன் 2014 செப்டம்பர் 16 ஆந் திகதி ஒப்பந்தமிடப்பட்டிருந்தது. இத்திட்டம் தொடர்பாக கடன் ஒப்பந்தத்தின் படி பாவனை மேற்கொள்ளக் கூடிய காலஎல்லை 2020.10.26 ஆந் திகதி முடிவடைந்துள்ளதுடன் திட்டத்தின் செயற்பாடுகள் மீது COVID 19 தொற்று நிலைமையின் தாக்கம் காரணமாக ரென்மின்பி யுவான் 540 மில்லியன் அளவு சேமிக்கப்பட்டது. இச்சேமிப்பினை பயனுள்ள வகையில் பாவனை மேற்கொள்ளப்பட்டுக் கெண்டு இத்திட்டம் சார்ந்த பாதைகளில் நிர்மாணப் பணிகளினை திட்டங்களை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணங்களை குறைப்பதற்கும் முழு கடன் தொகையினை பாவனை மேற்கொள் வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அம்மொத்தக் கடன் தொகையின் மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணம் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2021 யூன் 24 ஆந் திகதி வரையும் அக்கடன் தொயையில் ரென்மின் யுவான் 1,987,801,117 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 21 அதாவது ரென்மின்பி 540,370,717 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது. 2020 வருடம் மாத்திரம் நூற்றுக்கு 0.25 இணக்கக் கட்டணமாக ரென்மின்பி யுவான் 51,295,324 செலுத்தப்பட்டிருந்தது.

மேற்கொள்வதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் சேர்ந்து சீன இறக்குமதி ஏற்றுமதி வங்கியிடம் முன்வைக்கப்பட்ட போதிலும் அதனை அங்கீகரிக்கப்பட்ட போதிலும் அதனை அங்கீகரிக்கப்படவில்லை.

**(iv) கடன் இலக்கம் 2014026**

ஹம்பாந்தோட்டை சர்வதேச மையத்தின் பாதைகள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணிப்பு திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக ரென்மின்பி யுவான் 1,555,995,249 கடன் தொகையினை 05 வருட சலுகைக் காலத்துடனான 20 வருடங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு சீன இறக்குமதி ஏற்றுமதி வங்கியுடன் 2014 செப்டம்பர் 16 ஆந் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டதுடன் அதன் போது மொத்தக் கடன் தொகையில் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகை மீது வருடாந்தம் இத்திட்டம் தொடர்பான கடன் ஒப்பந்தத்தின் படி பாவனை மேற்கொள்ளக்கூடிய கால எல்லை 2020.10.26 ஆந் திகதி முடிவடைந்துள்ளதுடன் திட்டத்தின் செயற்பாடுகள் மீது COVID 19 தொற்று நிலைமையின் காரணமாக ரென்மின்பி யுவான் 27 மில்லியன் அளவு சேமிக்கப்பட்டது. இச்சேமிப்பினை பயனுள்ள வகையில் பாவனை மேற்கொள்ளப்பட்டு கொண்டு இத்திட்டத்தின் நிர்மாணிப்பு வேலைகளை செய்து முடிப்பதற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் சேர்ந்து சீன இறக்குமதி ஏற்றுமதி வங்கியிடம் பிரேரிப்பினை

திட்டங்களை துரிதமாக முடிக்கப்பட்டு இணக்கக் கட்டணங்கள் குறைப்பதற்கும் முழுகடன் தொகையினை பாவனை மேற்கொள் வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| நூற்றுக்கு 0.25 இணைக்கக் கட்டணம் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது.<br><br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2021 யூன் 24 ஆந் திகதி வரையும் அக்கடன் தொகையில் ரென்மின்பி யுவான் 1,554,505,538 பாவனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 1 அதாவது ரென்மின்பி யுவான் 1,489,711 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது 2020 வருடம் மாத்திரம் நூற்றுக்கு 0.25 இணைக்கக் கட்டணமாக ரென்மின்பி யுவான் 18,918,566 செலுத்தப்பட்டிருந்தது. | விடப்பட்ட போதிலும் அதனை அங்கீகரிக்கப்படவில்லை. |

**(v) கடன் இலக்கம் 2014027**

| | | |
|---|---|---|
| அம்பதலே நீர் வழங்கல் முறைமையினை மேம்படுத்துவதற்கும் மற்றும் வழுசக்தி சேமிப்பு திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக யூஎஸ்டொலர் 70,000,000 கடன் தொகையினை 07 வருட சலுகை காலத்திற்கான 25 வருடங்களில் மீளச் செலுத்துவதற்கான அடிப்படையில் முன் உரிமை கொள்வனவாளரின் கடன் வாய்ப்பினையின் கீழ் பெற்றுக் கொள்வதற்காக பிரான்ஸ் Agence Francaise de Development (AFD) வங்கியுடன் 2014 செப்டம்பர் 29 ஆந் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அம்மொத்தக் கடன் | இத்திட்டத்தின் செயற்பாடுகள் 2019 வருட இறுதியில் முடிப்பதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும், பெறுகையின் போது ஏற்பட்ட தாமதங்கள் ஒப்பந்தக்காரர்களினால் ஏற்படும் தாமதங்கள் போலவே ஒப்பந்தக்காரர்களின் தாபன முகாமைத்துவ சிக்கல்கள் காரணமாக ஒரு சில ஒப்பந்தங்களினை செயற்படுத்துவதிலும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. | திட்டங்களை துரிதமாக முடிக்கப்பட்டு இணைக்கக் கட்டணங்களை குறைப்பதற்கும் முழு கடன் தொகையினை பாவனை மேற்கொள் வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகையில் பாவனை மேற்கொள்ளப்படாத கடன் தொகை மீது வருடாந்தம் நூற்றுக்கு 0.5 இணக்கக் கட்டணம் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது.<br><br>கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2021 யூன் 24 வரையும் அக்கடன் தொகையில் ஐ.அ.டொலர் 16,870,469 பாவனை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அதன்படி கடன் தொகையில் நூற்றுக்கு 76 அதாவது ஐ.அ.டொலர் 53,129,531 பாவனை மேற்கொள்ளப்படாதிருந்தது. 2020 வருடம் மாத்திரம் நூற்றுக்கு 0.5 இணக்கக் கட்டணமாக ஐ.அ.டொலர் 53,132,020 செலுத்தப்பட்டிருந்தது. | | |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்குச் சொந்தமாக இரு வாகனங்களை நிதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு வாகனத்தின் பெறுமானம் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களிலோ அல்லது நிதி அமைச்சின் நிதிக் கூற்றுக்களிலோ உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | WP JV-1448 கொண்ட கெப் வாகனத்தினை நிதி அமைச்சு பெயரில் பதியப்பட்ட வாகனமாவதுடன் இத்திணைக்களத்தின் பொறுப்பில் இருந்த அவ்வாகனத்தினை ஒப்படைக்கும் போது அதன் சொத்துப் பெறுமதியினை இத்திணைக்கள பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இச்சொத்தினை நிதி அமைச்சின் சொத்துக்கான | திணைக்களத் திற்குரிய சொத்துக்களினை சரியாக இனங் காணப்பட்டு பட்டியலிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பட்டியல்களில் உட்படுத்தும் படி அறியக் கொடுத்துள்ளதுடன் அதற்காக அவ் அமைச்சு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. | |
| (ஆ) | 2021 திசெம்பர் 22 ஆந் திகதி, 30 அலுவலக உருக்கு அலுமாரிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவற்றில் 11 உருக்கு அலுமாரிகள் கிடைக்கப் பெற்றிருந்தன. ஒப்பந்தக்காரரினால் 30 உருக்கு அலுமாரிகளுக்கான ரூபா 1,108,080 ஆன இன்வொய்ஸ் சீட்டினை 2021 திசெம்பர் 22 ஆந் திகதி திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 30 திகதி கிடைக்கப் பெற்ற உருக்கு அலுமாரி 11 மாத்திரம் பணம் செலுத்தப்பட்டிருந்தது. மீதியுள்ள 19 உருக்கு அலுமாரிகளும் 2022 வருடம் கிடைக்கப் பெற்றிருந்தன. அவற்றிற்காக 2022 மார்ச் 23 திகதிய ரூபா 701,784 பெறுமதியான இன்வொய்ஸ் சீட்டினை திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான இரண்டு இன்வொய்ஸ் சீட்டுக்கள் திணைக்களத்திடம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் முதல் இன்வொய்ஸ் சீட்டில் குறிக்கப்பட்டிருந்த அளவினை (Quantity) மாற்றம் செய்யப்படாமல் இரண்டாவது இன்வொய்ஸ் | 2021 வருடம் 30 அலுவலக உருக்கு அலுமாரிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் உரிய தரத்திலான 11 உருக்கு அலுமாரிகளுக்கு மாத்திரம் பணம் செலுத்தப்பட்டதுடன் மீதமுள்ள 19 அலுமாரிகளையும் உரிய முறையில் சரி செய்யப்பட்டு மீண்டும் கொண்டு வரப்பட்டதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2021 வருடத்தின் அவற்றுக்கான கொடுப்பனவினை மேற்கொள்ள இயலாது போனமையினால் 30 அலுமாரிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட இன்வொயிஸ் சீட்டு தொடர்பில் 11 அலுமாரிகளுக்கு மாத்திரம் பணம் செலுத்தப்பட்டிருந்தது. | 2021 வருடத்திற்கான பொறுப்புக்களினை நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சீட்டுக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2021 வருடத்தில் கிடைக்கப் பெறாத பொருட்களுக்காக ரூபா 701,787 மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. | | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

**4.1 அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாம், உண்மையான பணிக்குழாம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் நிலவிய 26 வெற்றிடங்களுள் சிரேஷ்ட மட்டத்திலான 10 வெற்றிடங்கள் நிலவின. | 03 பதவிகள் மேற்கொண்டும் அவசியப்படாமையினால் 2022.03.23 திகதியுடனான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அப்பதவிகளினை கீழ் மட்டத்திற்கிடப்பட்டுள்ளன. சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்களினை 2022 வருடம் நிரப்பப்படுவதற்கு உத்தேசமாக இருந்ததுடன் தற்போதைக்கு வெற்றிடங்களில் 3 நிரப்பப்பட்டுள்ளன. | திணைக்களத்தின் பொறுப்பினை நிறைவேற்று வதற்கு போதுமான அளவிலான பணிக்குழாமினை தேக்கி வைத்துக் கொள்ளவும் அத்தியாவசியமற்ற மற்ற பதவிகள் இருப்பின் அவற்றினை மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |